**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 115/2019**

**2023ம் ஆண்டு ஜுலை மாதம் 18-ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**நேரம்:12.03 PM**

**பி.வா.சா.1- சௌந்தரம்**

**பிரதிவாதிகள் 3, 6, 7 தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.**

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை:-**

எந்த சொத்திற்காக எதிர்வழக்காடி வருகிறேன் என்றால், தாவா சொத்தில் 3வது லக்க சொத்திற்காக எதிர்வாதம் செய்கிறேன். இந்த வழக்கு நான் எதிர்வாதம் செய்வது தாவா 3ம் லக்க சொத்தை பொறுத்து மட்டும் தான் என்றால், சரிதான். வாதி தாக்கல் செய்த வம்சாவழி ஜாபிதா தவறாக உள்ளது என்று சொல்லியுள்ளீர்கள் அதில் எந்த தவறும் இல்லை என்று சொன்னால், சரிதான். முத்துராஜவும், முருகனும் பாகவிஸ்தி செய்துள்ளார்கள் என்றால், சரிதான். வேறு யாருக்காவது பாகவிஸ்தி செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. சரஜாவிற்கு பாகவிஸ்தி செய்யப்படவில்லை என்றால், சரிதான். எந்த வருடம் பாகம் பிரிக்கப்பட்டது என்றால், 2000தில் தான் முதல்முதலாக பாகவிஸ்தி செய்யப்பட்டது மாதம் தேதி தெரியாது. மேற்படி பாவிஸ்தி எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். அதனால் யார், யாருக்கு எந்த எந்த சொத்து ஒதுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். வாதி சரரோஜா வாய் பேச முடியாத, காது கேட்க முடியாத மாற்று திறனாளி என்றால், சரிதான் காது கேட்கும். பாகவிஸ்தி பத்திரத்தில் வாதி சரரோஜா கையெழுத்துள்ளாரா என்றால், கைரேகை வைத்துள்ளார். அந்த கைரேகை வாதி வைக்கவில்லை வேறு ஒருவரால் வைக்கப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி சரரோஜா பாகவிஸ்தி பத்திரத்தில் நேரடியாக பார்த்தீர்களா என்றால், இல்லை ஆவணத்தை தான் பார்த்தேன். 3வது லக்க யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால், முருகன், முத்துராஜவிடம் கிரையம் வாங்கினேன். தாவா 3வது லக்க சொத்து வாதியின் தகப்பனார்

பொன்னுச்சாமிக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால், சரிதான். கிரையம் வாங்கும் போது எந்த ஆவணத்தை பார்த்து வாங்கினீர்கள் என்றால், பாவிஸ்தி ஆவணத்தை பார்த்து வாங்கினேன். யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால், முத்துராஜா, முருகன், ராஜாத்தி ஆகியோரிடமிருந்து ஒரே பத்திரமாக தான் கிரையம் வாங்கினேன். ராஜாத்தி எத்தனை செண்டு கிரையம் வாங்கினார் என்றால், 1 ஏக்கர் 61 செண்டு அதில் பாதி ராஜாத்தி முத்துராஜாவிடம் கிரையம் வாங்கினார் அது பி.வா.சா.ஆ.23 ஆகும். பி.வா.சா.ஆ.24 ராஜாத்தியும், முருகனும் மட்டும் தான் இந்த கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். வாதி சரோஜாவுக்கும், முத்துராஜவுக்கும், முருகனுக்கும் இடையே சுமார் 15 வருடங்களாக சொத்து பிரச்சனை நடந்து வருகிறது என்றால், சரிதான். என் பெயரில் 3ம் லக்க சொத்திற்கு பட்டா மாறுதல் 2018-ல் செய்துள்ளேன் என்றால், சரிதான். பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பே என் பெயரில் தீர்வை ரசீது உள்ளது என்றால், சரிதான். சரோஜாவுக்கு எந்த சொத்தினை ஒதுக்கினார்கள் என்று தெரியுமா என்றால், எந்த சொத்தையும் பிரித்து கொடுக்கவில்லை. 3வது லக்க சொத்தின் பெண்மக்கள், ஆண்மக்களுக்கு பாக உரிமை உள்ளது என்றும், நான் வாங்கியுள்ள கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**